**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.40 /2015**

**Deposition of P.W.** 1

Name : திரு. இன்பராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 29.10.2025**

**Accused Present.**

<u>**முதல் விசாரணை–**</u>

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாராக பணியாற்றி ஓய்வு பெற்று பள்ளியாடியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் 23.10.2003ம் தேதி 13.15 மணிக்கு தக்கலைமது விலக்கு பிரிவு ஆய்வாளர் அவர்கள் மேற்பார்வையில் உதவி ஆய்வாளர் மற்றும் முதல்நிலைகாவலர் திரு. குணராஜன் ஆகியவர்கள் சகிதமாக மது விலக்கு ரோந்து செய்து திக்கணங்கோடு சந்திப்பு வரும் போது TN 74 Z 2778 சிகப்பு கலர் பஜாஜ் ஸ்கூட்டரில் வந்தவர்களை போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் திருப்பி ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரிக்க கண்ணன் என்பவர் வண்டியை ஓட்டி வந்ததாகவும் அவருக்கு பின்னால் ஜெகன் என்பவர் இருந்தார். கண்ணனின் கால் பகதியில் ஒரு சாக்குமூட்டை காணப்பட்டது. ஜெகனின் மடியில் ஒரு சாக்குமூட்டை காணப்பட்டது. அந்த மூடைகளை

திறந்த பார்த்த போது சுமார் 500 எம்.எல் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கவரில் தலா 125 பாக்கெட்டுகள் வீதம் இருந்தது. மொத்தம் 250 பாக்கெட்டுகள் மதுகஷாயம் காணப்பட்டது. மதுகஷாயம் பாக்கெட்டுகளில் எந்தவிதமான லேபிள்களோ, உரிமமோ இல்லாத காரணத்தால் மேற்படி எதிரிகளை கைது செய்து மதுகஷாயங்களை கைப்பற்றி மாதிரிக்காக தலா 2 பாக்கெட்டுகள் எடுத்து பாட்டில்களில் அடைத்து மூடி எஸ்.கைச்.ஓ சீல் வைத்து சம்பவ இடத்திலேயே அத்தாட்சி தயார் செய்து அந்த அத்தாட்சியல் தனி நபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் அந்த அத்தாட்சியில் நானும், குணராஜனும் கையொப்பம் இட்டோம்., அத்தாட்சியில் கைப்பற்றிய மதுகஷாயம் பாக்கெட்டுகள் கசிந்த நிலையில் இருந்ததால் சுமை லாபம் கருதியும் சம்பவ இடத்தில் கொட்டி அழித்து விட்டோம் எதிரிமற்றும் மாதிரி சொத்துகளுடன் இருசக்கர வாகனம் ஆகியவற்றுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். அத்தாட்சி அ.சா.ஆ.1. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

திக்கணங்கோடு சந்திப்பில் நான்கு பக்கமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் கைப்பற்றியதாக கூறும் நேரத்தில் ஆட்கள் நிறைய இருந்தார்கள் என்றால் சரிதான். அத்தாட்சியில் கையொப்பம் செய்ய முன்வராத நபர்கள் மீது சட்ட படியாக நடவடிக்கை எடுக்க வில்லை. நான் சொன்னது போல் பொருட்களை கைப்பற்றாததால் தனிநபர்கள் யாரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாக்கெடுகளில் இருந்த மதுகஷாயம் ஆயுர்வேத தயாரிப்பு என்றால் சரியல்ல. மதுகஷாயத்திற்கு உரிமம் வழங்கும் அதிகாரி அங்கு மருந்து

கட்டுப்பாட்டு ஆய்வாளர் என்றால் சரிதான். மதுகஷாய பாக்கெட்டுகள் அச்சில் வார்க்கப்பட்ட பாக்கெட்டுகளாக இருந்தது. மதுவிலக்கு பொருட்களை கைப்பற்றும் போது ஆய்வாளர் படிநிலைக்கு குறையாத அதிகாரியால் கைப்பற்றப்பட வேண்டுமென்றால் சரிதான். அ.சா.1 அத்தாட்சியில் ஆய்வாளரின் கையொப்பம் இல்லை. அ.சா.1 அத்தாட்சியில் 250 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுகஷாய பாக்கெட்டுகள் அ.சா.1 அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயம் பணியில் இருந்ததை காட்ட எனது பாக்கெட் டயரியை காவல்ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. மதுகஷாயம் எங்கு தயாரிக்கப்பட்டது, எங்கு வைத்து பாக்கெட்டுகளாக போடப்பட்டது போன்ற விபரங்கள் எனக்குத் தெரியாது. நாங்கள் கைப்பற்றிய மதுகஷாயத்தின் காரணமாக யாருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக புகார் வரவில்லை. நான் சொன்னது போல் எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.